# செம்பதாகை

மலர்: 3
இதழ்: 12
1981 மார்கழி
விலை சதம்: 75
புரட்சிகர வெகுஜனஏடு


# லண்டன் தமிழ் ஈழப்பிரகடனம்

# யாருக்கு நன்மை அளிக்கும்!

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று உத்தேச 'தமிழ் ஈழப் பிரகடனத்தை' லண்டனில் சிலர் மேற்கொள்ள இருப்பதாகக் கூறப்படுகின்றது. இத்தகைய பிரகடனம் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு எத்தகைய பலாபலன்களையும் அளிக்கப்போவதில்லை. மாறாக இனங்களுக்கிடையிலான கசப்புணர்வுகளையும் நெருக்கடிகளையும் தீவிரப்படுத்தி இனவாத அரசியலை முன்னெடுக்கும் ஆளும் வர்க்க சக்திகளுக்கே அப்பிரகடனம் உதவி செய்யும்.

ஆளும் கட்சியான யூ.என்.பி. 82ஆம் ஆண்டை தேர்தல் ஆண்டாக ஏற்கனவே பிரகடனம் செய்துள்ளது. இத்தேர்தல் ஆண்டில் எவ்வாறு மக்கள் முன்னிலைக்குச் செல்லலாம் என்றே யூ.என்.பி. ஆழமாக யோசிக்கின்றது. தான் ஏற்கனவே மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றாத நிலையில் நாட்டின் சகல துறைகளும் சீரழிக்கப்பட்டு சின்னாபின்னப்படுத்தப்பட்டுள்ள நிலையில் — மக்கள் தாங்கமுடியாத வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பால் அவதியுறும் இன்றைய நிலையில் மக்கள் முன் செல்ல முடியாது. யூ.என்.பி. இன்று தத்தளிக்கின்றது. இவ்வேளை மக்களின் கவனத்தை திசைதிருப்பக் கூடிய ஒரேயொரு துரும்பு இனவாதம் மட்டுமே என்பதை யூ.என்.பி. நன்கு அறியும். அதனாலேயே லண்டன் தமிழ்ஈழப்பிரகடனத்தை அரசு மிகப் பெரிதுபடுத்தும் பிரசாரத்தில் இறங்கியுள்ளது. இந்த லண்டன் பிரகடனத்திற்கு இதுவரை இலங்கையிலிருந்தோ அன்றி இந்தியாவில் இருந்தோ எவ்வித ஆதரவும் தெரிவிக்கப்படவில்லை. யூ.என்.பி.யின் நம்பிக்கைக்குரிய கூட்டாளியான தமிழர் கூட்டணி பகிரங்கமாகவே லண்டன் பிரகடனத்திற்கு எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளது. அப்படி இருந்தும் அரசாங்கம் தமிழ் ஈழப் பிரகடனத்தைக் கண்டு மிரள்வது போல் காட்டிக்கொள்கின்றது. அரசு அவ்வாறு செய்வதால் மட்டுமே தன் மீது வீழ்ந்திருக்கும் மக்களின் கவனத்தை திசை திருப்பி தமிழ் ஈழப் பிரகடனத்தின் பக்கம் விட்டால் மீண்டும் ஆட்சிபீடத்தைக் கைப்பற்றுவதற்கு சுலபமானவழி ஏற்பட்டுவிடும் என நம்புகின்றது. 'சோழியன் குடுமி சும்மாஆடாது' என்பார்கள். ஜே. ஆர். சாதாரணமானவர் அல்லவே. அவர் முகத்திற்கு குத்துவதுபோல் பாவலை காட்டி வயிற்றில் குத்துபவர் அல்லவா? எனவே உத்தேச லண்டன் தமிழ் ஈழப்பிரகடனத்தால் அதிக நன்மைகளை பெறப்போகிறவர்கள் ஆளும் யூ.என்.பி. சக்திகளேயாவர்.

அடுத்து, இத்தமிழ் ஈழப் பிரகடனத்தால் நன்மை பெறப்போகிறவர்கள் யூ.என்.பி.யின் சகாக்களாக உள்ள தமிழர் கூட்டணியினரே. எப்படி அவர்கள் நன்மை பெறப்போகின்றனர் எனச் சிலர் வினவலாம். அதாவது இருமுனைகளில் கூட்டணியினர் இப்பிரகடனத்தை சாட்டாக வைத்து லாபம் சம்பாதிக்கப் போகின்றனர். முதலாவது லண்டனில் மேற்கொள்ள இருக்கும் தமிழ் ஈழ பிரகடனத்தை வன்மையாக எதிர்த்தும் கண்டித்தும் தமிழர்கூட்டணித் தலைமை உத்தியோகபூர்வமான அறிக்கையை வெளியிட்டு விட்டார்கள். மேலும் அதற்கு எதிராகப் பேசி வருவதுடன் தமது செல்வாக்குக்கு உட்

(6-ம் பக்கம் பார்க்க)

## கல்வி வெள்ளையறிக்கைக்கு மலையகத்தில் கண்டனம்!

கல்வி வெள்ளை அறிக்கையானது தோட்டப்புற பாடசாலைகளை எவ்வகையிலும் முன்னேற்றுவதற்கான எந்த ஒரு அம்சத்தையும் உள்ளடக்கவில்லை; வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 'கொத்தணி' முறையின் கீழ் எந்த ஒரு தோட்டப்பாடசாலையும் கவனிக்கப்படமாட்டாது. நாடு முழுவதிலும் பின்தங்கிய நிலையிலுள்ள பாடசாலைகளுக்குக் கொத்தணி முறையால் படுமோசமான பாதிப்பே ஏற்படும். அதேபோல் தாய்மொழிக் கல்விக்கும், தேசிய அபிலாசைகளுக்கும் கல்வி வெள்ளை அறிக்கை சாவுமணி அடிப்பதுடன் உயர் வர்க்கத்தினரின் கல்வி வசதிக்கான வாய்ப்பையே ஏற்படுத்துகின்றது. ஆதலால் மலையக மக்கள் நாட்டின் சகல பகுதி மக்களுடனும் இணைந்து கல்வி வெள்ளை அறிக்கையை கண்டித்து எதிர்க்கவேண்டும்.

மேற்கண்ட தீர்மானம் இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கத்தின் விரிவுபடுத்தப்பட்ட மலையகப் பிரதேசக் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. மேலும் அக்கூட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் இன்றைய வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பால் பெரும் கஷ்டத்துக்கு ஆளாக்கப் பட்டுள்ளனர். அவர்களுக்குக் கடந்த வருடம் வழங்கப்பட்ட 70 ரூபா சம்பள உயர்வு இதுவரை வழங்கப்படவில்லை. அதே நேரம் அண்மையில் வழங்கப்பட்ட 107 சம்பள உயர்வும் மறுக்கப்பட்டுள்ளது. எனவே தோடத்தொழிலாளர்களுக்கு ரூபா 177 சம்பள உயர்வு உடன் வழங்கவேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

மேலும் எதிர்வரும் ஆசிரியர் நியமனத்தில் மலையக படித்த இளைஞர்கட்கு முன்னுரிமையும் வாய்ப்பும் வழங்கப்படல்வேண்டும். மலையக பாடசாலைகளுக்கான ஆசிரியர் தெரிவு முற்றிலும் மலையகத்திலேயே இடம்பெறல் வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

மேற்கண்ட மூன்று தீர்மானங்களையும் அறிக்கையாகத் தயாரித்து மலையகத்தின் சகல பகுதிகளிலும் விநியோகித்து மக்களுக்கு நிலைமைகளை விளக்குவது, ஆங்காங்கே கருத்தரங்குகளையும் நடத்துவது எனவும் தீர்மானிக்கப் பட்டது.

மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாலிபர் இயக்கம் தலையிட்டு செய்யப்படவேண்டிய பல பிரச்சினைகளும் கமிட்டியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு தீர்மானங்களாக்கப்பட்டன.

## யாழ். பல்கலைக்கழக தேர்தலில் யூ.என்.பி.-கூட்டணி உறவு!

இந்த மாதம் — டிசம்பர் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் சுவையான நாடகம் ஒன்று நடந்தது. முதலாளித்துவ தேர்தல் ஒரு அரசியல் ''ஏமாற்று நாடகம்'' என்பதை அது நிரூபித்தது. இந்த தேர்தல் நாடகத்திலும், இரட்டை வேடத்திலும் கைதேர்ந்தவர்கள் தமிழர் கூட்டணியினர் என்பது உலகு அறிந்த செய்தியே. பிரதான நாடகம் பாராளுமன்ற தேர்தல், பின்னர் அபிவிருத்திச் சபைக்கான 'மினி' தேர்தல் நாடகம் நடந்தது. அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு ஒரு உபவேந்தரைத் 'தெரிவுசெய்யும் 'மினி மினி' தேர்தல் நாடகம் அண்மையில் நடந்து முடிந்தது.

தள(ர்)பதி அமிரின் ஆசான் என கூட்டணி வட்டாரங்களில் விவரிக்கப்படும் நபர் - வித்தியானந்தன் - உபவேந்தராக 'தெரிவு' செய்யப்பட்டிருக்கிறார். யூ.என்.பி. அரசு உருவாக்கிய 1979-ம் வருட பல்கலைக்கழக சட்டப்படி ஆசிரியர்கள் பேராசிரியர்களுக்கு உபவேந்தர் தெரிவில் பங்கு இல்லை! வாக்களிக்கும் உரிமையும் இல்லை. நிர்வாகப் பதவிகள் வகிக்கும் சில பேராசிரியர்களைத் தவிர ஏனையோருக்கும் வாக்குரிமை இல்லை என்பதே சிந்தனைக்குரியதாகும். எம். பீ.க்கள் உட்பட அரசு நியமிக்கும் வெளியாருக்கே வாக்குரிமை உண்டு. அரசும், அமிரும் சேர்ந்து ஆளுநர்சபைக்குநியமித்திருந்த முதியவர்கள் ஒன்று கூடி உபவேந்தரைத் தெரிவு செய்தனராம். யூ.என்.பி. தமிழர் கூட்டணி ஒத்துழைப்பு மிக உன்னதமான முறையிலே இத்'தேர்தல்' நிரூபித்தது. கொழும்பிலிருந்து வரும் மாதமிரு முறை ஆங்கில சஞ்சிகை ஒன்று குறிப்பிட்டிருந்ததைப் போல 'யாழ்ப்பாணபல்கலைக்கழக தேர்தலில் யூ.என்.பி. — தமிழர் கூட்டணி அபேட்சகரே' வெற்றிபெற்றார்.

இதில் விசேடம் பல்கலைக்கழகத்திற்குள் இருந்து அளிக்கப்பட்ட வாக்குகள் எதிர்த்துப் போட்டியிட்டவருக்குப் போடப்பட்டதாகக் கூறப்படுகிறது. அரசு நியமித்த வெளியாரின் 'அரசியல் செல்வாக்கு' வாக்குகள் மட்டுமே வென்றவருக்கு போடப்பட்டனவாம். கூட்டணி எம். பி. இராசலிங்கம் உட்பட அரசியல் பிரமுகர்கள், அமிரின் ஆணைப்படி நடந்துகொண்டனர்.

அமிருக்குக் கோபங்கள் பல. மாணவர்கள் தனது கொடும்பாவியை எரித்தது; அரசியல் விமர்சன அறிக்கைகள் வெளியிடுவது, தங்கள் சொல்லுக்கு மாணவரும் ஆசிரியரும் கட்டுப்படாமல் நடப்பது; மாவட்ட அபிவிருத்தி பற்றி காரசாரமாக பல்கலைக்கழக மாணவர் ஆசிரியர் கருத்துத் தெரிவிப்பது. இவை அமிர் தாங்க முடியாதவை. எனவே சனாதிபதியிடம் நேரில்பேசி, அரசு நியமித்தவர்களைத் தனது கையாள்சார்பாக வாக்களிக்குமாறு கட்டளை இடச்செய்தாராம். பெரிய தேர்தலைப் போலவே இதிலும், சகலவிதமான பேரங்களும், சலுகைகளும், உபகாரங்களும் மேல் மட்டத்தில் செய்யப்பட்டதாக ஊரில் பேசிக்கொள்கிறார்கள். கொழும்பிலிருந்து நோகாமல் வந்துபோவதற்காகச் சில மாஜி பிரமுகர்களுக்கு உபாலி விமான டிக்

(6-ம் பக்கம் பார்க்க)

## சோவியத் சமூக ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு!

செக்கோஸ்லவேக்கியா மீது 1968ல்
ஆப்கானிஸ்தான் மீது 1979ல்
போலந்து மீது விரைவில்!!

# கருத்தும் கண்ணோட்டமும்

ஜனமகன்

# சுதந்திரக் கட்சிப் பிளவின் பின்னால் இருப்பவர் யார்?

ஆளும் கட்சியான ஐ. தே. க, விலும், பாராளுமன்றத்தில் இல்லாவிடினும், பாராளுமன்ற அரசியலில் முக்கியமான எதிர்க்கட்சியான சுதந்திரக்கட்சியிலும் கோஷ்டி மோதல்களும் பிளவுகளும் இன்று மும்முரமாக நடைபெறுகின்றன என்பது அனைவரும் அறிந்ததே. ஆளும் கட்சியின் தில்லுமுல்லுகட்கு பின்னால் அமெரிக்க சூத்திரதாரிகள் இருப்பதுபோலவே சுதந்திரக்கட்சியின் உள்பிளவுகளுக்கு முக்கிய தூண்டுகோலாக சோவியத்தந்திரோபாயம் இருப்பது இப்பொழுது தெளிவாகி வருகிறது. பல்வேறு காரணங்களினால் சுதந்திரக்கட்சியின் பெரும்பான்மையினர் ஆரம்பத்திலிருந்தே சீனாவுடன் நட்புரிமைபூண்டவர்களாகவும், சர்வதேச அரங்கில் சீனாவின் நியாயமான— ஆக்கபூர்வமான கொள்கைகளை ஆதரிப்பவர்களாகவும் இருந்து வந்திருக்கின்றனர். காலஞ்சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பின்னர் திருமதி சிறீமா பண்டாரநாயக்கா இருவரும் சீனாவுடனும், சீனத் தலைவர்களுடனும் சினேகபூர்வமான உறவுகளை உறுதியுடன் வளர்த்து வந்துள்ளனர். இது சோவியத் ஆதிக்க வெறியர்களுக்கு ஆத்திரமாக இருந்ததை சிலர் அவதானித்து வந்திருக்கலாம்.

இந்த பின்னணியிலேயே இப்பொழுது சிறிமா, மைத்திரி பிரிவுகள் என்ற பிரசாரத்தை நாம் நோக்கவேண்டும். கடந்த சிலகாலமாகவே திரிபுவாத கம்யூனிஸ்ட் ஏடுகளும் 'டிரிபியூன்' 'கார்டியன்' போன்ற சோவியத் சார்பு [வால்பிடி] ஏடுகளும் திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையை நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கியும் மாசுபடுத்தியும் எழுதிவந்துள்ளன. உண்மையில் மைத்திரி அனுரா கோஷ்டியை உருவாக்குவதில் சில அகக்காரணங்களிலும் பார்க்க சோவியத் தலையீடும் சூழ்ச்சியுமே முக்கியமாக அமைந்தன. பிளவு ஒன்றை உண்டாக்கிவிட்டு இப்பொழுது அவசரம் அவசரமாக மைத்திரி கோஷ்டிக்கும் — பீட்டர் கெனமன் கும்பலுக்கும்பேச்சுவார்த்தைகளை ஏற்படுத்தியிருப்பதும் சோவியத் ஏவலேயாகும். சுதந்திரக் கட்சியை சீனசார்பிலிருந்து தமதுபக்கம் இழுப்பதே இச்சூழ்ச்சியின் பிரதான குறிக்கோளாகும். 'ஐக்கிய இடதுசாரி' முன்னணி ஒன்றை தமது வசதிக்காக உருவாக்குவதே திரிபுவாதகட்சியினதும் அதன் எஜமானான சோவியத்தினதும் திட்டம். இதற்காகவே பல்வேறு தந்திரோபாயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்கலாம். இவற்றின் அடிப்படைநோக்கு சீன எதிர்ப்பேயாகும். அண்மையில் டிரிபியூன் என்ற 'சுதந்திர' ஏடு திரிபுவாதக்கட்சி ஏட்டிலிருந்து சீன எதிர்ப்பு கட்டுரைகளை எடுத்துப் பிரசுரித்திருப்பதும். அதே இதழ் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை வானளாவப் புகழ்ந்திருப்பதும் கேலிக்கிடமாக உள்ளது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களில் அனுபவமும் அக்கறையுங்கொண்ட இலங்கை மக்கள் குறிப்பாக சிங்கள பொதுமக்கள் சோவியத் ஏஜண்டுகள் செய்துவரும் இத்தகைய சதிகளுக்குப் பலியாக மாட்டார்கள் என்று எதிர்பார்க்கலாம். சனநாயக—தேசபக்த—புரட்சிகர சக்திகள் ஒன்றுபட்டு உழைத்துத் தேசிய நலன்களைக் கட்டிக்காக்க முற்படுவதன் மூலமே சகலவிதமான ஏகாதிபத்திய சூழ்ச்சிகளையும் முறியடிக்கலாம் என்பது திண்ணம்.

★

நாட்டின் நிதி நிலைமை ஏறத்தாழ ஸ்தம்பித நிலையை அடைந்துவிட்டதை இப்பொழுது அரசாங்கமே வேண்டா வெறுப்புடன் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. 'எங்களை நம்பி எல்லாரும் கடன் தர முன்வருகிறார்கள்' என்று கடந்த மூன்று வருடங்களாக மூச்சுவிடாமல் கொக்கரித்துக் கொண்டிருந்த அமைச்சர்கள் குறிப்பாக சனாதிபதியும் பிரதமரும் நிதிமந்திரியும் இப்பொழுது வேறு குரல்களில் பேச ஆரம்பித்திருக்கின்றனர். கடனுக்கும் எல்லையுண்டு எனவும், சுயமுயற்சியே விரும்பத்தக்கது என்றும் சில குரல்கள் ஒலிக்கத் தொடங்கி உள்ளன. இது காலந்தாழ்ந்த ஞானோதயம் அல்ல. மக்களை ஏமாற்ற எத்தனிக்கும் குரலாகும். துரித மகாவலி, கிராம வீடமைப்பு திட்டம், பல்வேறு அதிகார சபைகள் புதிய தலைநகர் இவற்றுக்கே பல்லாயிரம் கோடி ரூபா செலவிடப்படுகிறது. நாம் எத்தனையோ தடவைகள் இப்பகுதியில் சுட்டிக்காட்டி இருப்பதைப் போல கோடிக் கணக்கில் தாரைவார்க்கப்படும் இப்பணத்தில் இலட்சக்கணக்கில் சிலரின் கைகளுக்கும், பைகளுக்கும் சென்றுவிடுகின்றன. கொந்தராத்துக்காரரின் 'சுகபூமி' இலங்கை என்பது இப்பொழுது உலகில் பொதுவாகப் பேசிக்கொள்ளப்படும் கதையாகும். தென்கொரியா கொங்கொங், சிங்கப்பூர், தாய்வான், பிலிப்பைன்ஸ் முதலிய ஆசிய நாடுகளின் முதலைகளும் ஐரோப்பிய பெரும் முதலைகளும் இலங்கையை விழுங்கிக் கொண்டிருக்கின்றன. கொரியர்கள் இருநூறு. முந்நூறு வீதம் இலாபம் வைத்துச் சம்பாதிப்பதாக விஷயமறிந்த உத்தியோகத்தர்கள் காதோடு காதாய்ப் பேசிக்கொள்கிறார்கள்.

கடனுதவி வழங்கும் உலகவங்கியே பிரதமரின் புதியசேரி அமைக்கும் திட்டம் விழலுக்கு நீர் இறைப்பதைப்போன்றது என்று முறைக்குமுறை குறிப்பிட்டிருப்பது அவ்வப்போது வெளிவந்தசெய்திகளிலிருந்து தெரிவதாகும். ஐந்துவருடங்கள்தானும் உறுதியாக நிற்க மாட்டாத வீடுகளை அந்நிய கொந்துராத்துக்காரர் கட்டி வருவதாக வெளிநாட்டு அவதானிகளும் பத்திரிகையாளரும் கூறிவருகின்றனர். சுவீடிஷ் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றும் உலக தொழில் நிறுவனமும் சென்ற வருடம் நடாத்திய மதிப்பீடு ஒன்றின்படி வீடமைப்புக்கு செலவழிக்கப்பட்ட இமாலய நிதியில் அறுபது சதவீதம் ஊழல் லஞ்சம், வீண்விரயம், கையாடல் இவற்றுக்கு இரையானது என்று தெரியவருகிறது. இருபது கோடிரூபா செலவில் உள்ளூர் கம்பெனிகள் கட்டுவதாகக் கேட்ட கொந்தராத்து வேலையை எழுபது கோடிரூபா கொந்தராத்தாக கொரிய கம்பனிக்கு அமைச்சு வழங்கியது எனப் பலரும் பேசிக்கொள்கின்றனர்.

## பிரதமரின் திட்டங்கள் பிசுபிசுத்து விட்டன!

## இலங்கை கொந்தராத்துக்காரரின் 'சுகபூமி'

இந்த இலட்சணத்தில் பாராளுமன்றத்திலே வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது வீடமைப்பு அமைச்சிற்கான மானியம் குழுநிலையில் ஆராயப்பட்டபோது அவசரக்குடுக்கை அமிர்தலிங்கம் எழுந்து தனக்கே இயல்பான அர்த்தமற்ற அடுக்குமொழியில் நாட்டுக்கு நன்மை பயக்கும் நல்ல திட்டத்தை நடாத்தும் நல்லவர் பிரேமதாசாவின் கோரிக்கை நியாயமானது' என்றதொனியில் பேசித் தனது அடிவருடும் பழக்கத்தை அம்பலமாக்கியதுமட்டுமன்றி பலரின்பரிகாசத்துக்கும் ஆளாகினார். எச்சில்துண்டைப் பொறுக்குவதற்கும் எல்லை இருக்கிறதே! அமைச்சர்களின் அற்புத சேவைகளுக்கு புகழ்மாலை சூட்டுவதுதான் பாராளுமன்றத்தில் தமிழர் வியாபாரக் கூட்டணியினர் செய்யும் மகத்தான கைங்கரியம் என்று யாவரும் பேசுவதுகூட அவர்கள் காதுகளில் விழுவதில்லை போலும்: முன்னாள் கூட்டணி ஆதரவாளர் ஒருவர் சில தினங்கட்குமுன் கூறியதுபோல, ''அவர்கள் இப்பொழுது தமிழ்ப்பகுதிகளிலும் தமிழ்மக்கள் மத்தியிலும் இருந்தாலல்லவா தமிழ்க்குரல் கேட்கும்? அவர்கள்தான் குளிரூட்டப்பெற்ற ஹோட்டல்களிலும், ஜனாதிபதி மாளிகைகளிலும் சல்லாபித்துக்கொண்டு பத்திரிகைகளுக்கு அறிக்கைகள்விடுத்துக் கொண்டும் இருக்கிறார்களே நாங்கள் யாரிடம் கூறுவது'' என்று பொதுமக்கள்பரவலாகப் பேசிக்கொள்கின்றனர்.

★

## அமிர் இந்தியத் தூதுவரை அடிக்கடி சந்திப்பது ஏன்?

சமீப காலத்தில் குறிப்பாகக் கடந்த சில மாதங்களாக கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்தார் இந்தியத் தூதுவர் தொமஸ் ஆபிரகாம் அவர்களை அடிக்கடி சந்தித்து வருவதாக அவதானிகள் கூறுகின்றனர். தமிழக அரசியல் பிரமுகர்களும், சில மத்திய அரசு பிரமுகர்களும் அளவுக்குமீறி இலங்கைத் தமிழர் பிரச்சினைகளில் ஈடுபாடு காட்டுகின்றனர் என்றும், இந்தியா வெளிப்படையாகவே கூறுவதுபோல தமிழர் பிரச்சினை இலங்கையின் 'உள்நாட்டுவிவகாரம்' என்பதை தாமும் முற்றுமுழுவதாக ஏற்றுக்கொள்வதாகவும் அமிர்தலிங்கம் ஆபிரகாமுக்கு மீண்டும் மீண்டும் கூறுகின்றாராம். ஆபிரகாமைத் திருப்திப்படுத்துவது ஒருபுறம் இருக்க, அவர்மூலம் இந்திராகாந்திக்கும் இந்திய வெளிநாட்டு அமைச்சுக்கும் சில விடயங்களை உணர்த்துவதே அவரின் நோக்கம் என்று தெரியவருகிறது.

பஞ்சாப் மாகாணத்தில் சீக்கியரில் ஒரு பகுதியினர், காலிஸ்தான் என்ற பெயரில் தனிநாடு ஒன்று அமைக்கும் இயக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். வட அமெரிக்கா, கனடா, ஜேர்மனி முதலியபிராந்தியங்களில் வாழும் சீக்கியர்கள் இந்தப் பிரிவினை இயக்கத்தை ஆதரிப்பதாக கூறப்படுகிறது. இது சம்பந்தமாக இந்தியா கனடாவிற்கு ஆட்சேபனைக் கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தது. இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி இந்தப் பிரிவினை இயக்கம் ஈவிரக்கமின்றி அடக்கப்படும் என்று கூறிவருகிறார்.

காலத்துக்குக்காலம் பல்டி அடிக்கும் தள(ர்)பதி அமிர் இப்பொழுது தானும் தனிநாட்டுக் கோரிக்கைக்கு எதிர் என்றும், காலிஸ்தான் கோரிக்கை போலவே காலத்துக்கு ஒவ்வாதது தனித்தமிழ் ஈழக் கோரிக்கை என்றும் இந்தியத் தூதுவருக்கு ஓயாமல் கூறி வருகிறாராம். இதன் அடிப்படையில் இந்திராகாந்தியுடன் புதிய உறவையும்விளக்கத்தையும் ஏற்படுத்திக்கொள்ள விரும்புவதாகவும் ஆபிரகாமுக்கு அமிர்தெரிவிக்கிறாராம்.

இந்த சம்பாஷணையின் போது அமிர்தலிங்கம் காலிஸ்தான் கோரிக்கைக்கும் தமிழ் ஈழக்கோரிக்கைக்கும் ஒப்புமை கண்டு அவற்றின் தீமைகளை இந்தியத்தூதுவருக்கு எடுத்துரைத்தது அவரின் மேதாவிலாசத்தைக் காட்டுவதாக அருகிவரும் அவரது அபிமானிகள் கருதக்கூடும். ஆனால் அமிரின் இலக்கு சில நபர்கள்மீதுதான் இருப்பதை அவதானிக்கலாம். இலண்டனிலும். வாஷிங்டனிலும் அமெரிக்காவின் வேறு சில நகரங்களிலும் வாழும் சில தமிழ்த் தீவிரவாதிகளே ஈழப்பிரகடனத்தைச் செய்யப் போவதாக கூறி வருகின்றனர். காலிஸ்தான் ஆதரவாளர்கள் கனடாவிலிருந்து ஆதரவு வழங்குவதுபோல ஈழத் தமிழக ஆர்வலர்கள் இலண்டன் முதலிய பட்டணங்களிலிருப்பது அமிருக்கு ஆத்திரமாய் இருக்கிறது. அதுமட்டுமல்ல; அப்பிரகிருதிகளில் ஒருவரான வைகுந்தவாசன் இந்திராகாந்தியைச் சில தடவைகள் சந்தித்தும், கடிதத்தொடர்பு கொண்டும் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துக் கூறியது சிலருக்கு நினைவிருக்கலாம். காலிஸ்தானை நினைவூட்டி, வைகுந்தவாசன்போன்றோரை இந்திராவுக்கு ஆகாதவர்களாகச் செய்வதே செயலாளர் நாயகத்தின் மதியூகம். இதனையே தொமஸ் ஆபிரகாம் மூலம் செய்து முடிக்க எத்தனிக்கிறாராம். 'தனக்கு மூக்கு அறுபட்டாலும் எதிரிக்குச்சகுனப்பிழை' ஏற்பட்டால்போதும் என்ற செய்வினைசூனிய மனோபாவத்துடன் இயங்குகிறார் அமிர்தலிங்கம் என்று இந்தியதூதுருக்குப் பழக்கமான சிலர் காதோடுகாதாய்க் கூறுவதும் கேட்கிறது.

★

## 'மிகாரா'வுக்கு கூட்டணியின் இரகசியங்கள் எப்படித் தெரிந்தது?

இந்தியத் தூதுவரோடு மாத்திரம் அமிர்தலிங்கம் அண்மைக் காலங்களில் பேசவில்லை என்று கூட்டணி இளைஞர்களில் பலர் இப்பொழுது பேசிக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றனராம். வீக்என்ட் என்ற ஆங்கில வார இதழ் சிந்தாமணி குழுவிலிருந்து வெளிவருவது. அதில் ''மிகாரா'' என்ற புனைபெயரில் ஒருவர் அடிக்கடி அரசியல் விமர்சனம் எழுதுபவர். சூத்திரதாரி ஜெயவர்த்தனா — ஜனாதிபதி என்ற முறையில் நேரடியாக கூற விரும்பாதவற்றையும் முடியாதவற்றையும் இந்த மிகரா மூலமாக எழுதுவிக்கிறார் என்பது உலகப் பிரசித்தம். ஜனாதிபதிக்கு அண்மித்தவராகையால் இவர் நாட்டின் பாதுகாப்பு கவுன்சில் விவகாரங்களையும் அறிந்த தொனியில் வாராவாரம் எழுதுவது வழக்கம்.

சில நாட்களுக்கு முன் இந்த 'மிகரா' ஈழப்பிரச்சினை பற்றி எழுதியிருந்த நீண்ட. விஷயமறிந்த - விமர்சனத்தில் ஈழபிரகடனம்பற்றியும் தமிழீழ போராட்ட வரலாறு பற்றியும் நுணுக்கமாகவும், விவரமாகவும் தினக்குறிப்புகளின் அடிப்படையில் எழுதியிருந்தார். இதில் விசேடம் என்னவென்றால் அமிர்தலிங்கமும் அவர் புத்திரன் லண்டன் புகழ் காண்டீபனும், பலகாலமாகவே ஈழப்பிரகடனத்தை எதிர்த்து வந்திருப்பதாக விவரங்களுடன் அந்த நிருபர் எழுதியிருக்கிறார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# யூ.என்.பி. எதிர்ப்பு முன்னணி பற்றி சரியானதொரு நிலைப்பாடு வேண்டும்!

பெருமுதலாளித்துவக் கட்சியான யூ.என்.பி. நாட்டின் சகலதுறைகளையும் சீர்குலைத்து மக்களின் வாழ்வை நாசப்படுத்திக் கொண்டிருக்கிறது. இத்தகைய நிலைக்கு எதிராக யூ. என்.பி. எதிர்ப்பு ஐக்கிய முன்னணி ஒன்று உருவாக்கப்படல் வேண்டும் என்பதே மக்களின் இன்றைய அபிலாஷையாகும்.

ஆனால் எவ்வாறு யூ.என்.பி. எதிர்ப்பு ஐக்கிய முன்னணி உருவாக்கப்படல் வேண்டும், எப்படி அம்முன்னணி தனது நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பன போன்ற கேள்விகள் பல கட்சிகளாலும் குழப்பிவிடப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. கிட்டத்தட்ட எல்லாப் பாராளுமன்றக் கட்சிகளும் யூ.என்.பி. எதிர்ப்பு பற்றி வெறுமனே பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றுவதையே மையமாகக் கொண்டு பேசிவருகின்றன. இதனால் நாட்டு மக்களின் அடிப்படை அபிலாஷைகளை முதன்மைப்படுத்தும் ஒரு பொதுவேலைத் திட்டத்தை உருவாக்கி அதன் அடிப்படையில் யூ.என்.பி.எதிர்ப்பியக்கத்தை முன்னெடுக்க முடியாத நிலையிலுள்ளன.

அண்மைக் காலங்களில் சில கட்சிகளின் சார்பாக வெளியிடப்பட்ட கருத்துக்களை கவனிப்பது அவசியமாகும். திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தலைவர்களும் வெளியிட்டுள்ள கருத்துக்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தவிர்ந்த [சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான கட்சி] ஏனைய இடதுசாரிக் கட்சிகளின் ஐக்கிய முன்னணியை ஏற்படுத்த வேண்டும் என்று கூறுகின்றார்கள். இதற்கு அவர்கள் கூறும் காரணம் அக்கட்சியும் ஒரு முதலாளித்துவ கட்சி என்பதாகும். இந்தக 'கண்டுபிடிப்பை' அவர்கள் கற்றுணர்வதற்கு ஏழுவருடங்கள் ஆட்சியில் பங்கேற்க வேண்டிய காலம் தேவைப்பட்டதுதான் வேடிக்கையானது. ஆனால் உண்மை அவ்வாறானதல்ல. அதாவது பழைய ஐக்கிய முன்னணி அரசில் பங்கு கொண்டு படிப்படியாக இலங்கையைச் சோவியத் சமூக ஏகாதிபத்திய அரவணைப்பிற்குள் கொண்டு சென்றுவிடவே அவர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்து பார்த்தனர். ஆனால் அதில் அவர்கள் வெற்றி பெற முடியவில்லை. அதில் வெற்றி பெற்றிருந்தால் இன்று சிறிமாவோ பண்டாரநாயகா அவர்கள் திரிபுவாத சக்திகளின் 'நன்மதிப்பை' பெற்ற

= நமது நிருபர் -

தலைவியாகப் போற்றப்பட்டு இருப்பார். ஆதலால் இன்று சிறிமாவோ தலைமையிலான சுதந்திரக்கட்சி தவிர்ந்த ஏனைய இடதுசாரிகளின் ஐக்கியம்பற்றி அவர்கள் பேசுகிறார்கள். அவர்களது நோக்கம் இலங்கையை சமூகஏகாதிபத்திய முகாமின் பக்கம் இழுத்துச் செல்வதேயாகும். அதற்கு அளவான ஐக்கிய முன்னணிபற்றியே அவர்கள் பேசுகிறார்கள்.

தங்களைத் தாங்களே, 'உண்மையான இடதுசாரிகள்' எனக்கூறிக்கொண்டு யூ.என்.பி.க்கு உதவிவரும் ஜே-வி.பி.யினர் யூ.என் பி. எதிர்ப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை, தனியாக தாங்களே ஆட்சிக்கு வரவேண்டும் என கூறி வருகின்றனர். சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் ஆலோசனைப்படி திரிபுவாதக் கட்சியுடன் கூட ஒரு ஐக்கியத்துக்கு வர முடியாத நிலையில் யூ.என்.பி.க்கு விசுவாசமாக ஜே.வி.பி.யினர் செயல்படுகின்றனர். இந்நிலையில் இவர்கள் யூ.என்.பி. எதிர்ப்பு ஐக்கிய முன்னணி பற்றிய மக்களின் அபிலாஷைக்கு எவ்வித பங்கையும் வகிக்க முடியாது. அதுமட்டுமன்றி இன்றும் ஜே.வி.பி.யினரின் பிரதான எதிர்ப்பு யூ. என்.பி.க்கு அல்ல, சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கே யாகும். இத்தகைய ஒருமுனைவாதிகளால் யூ.என்.பி. எதிர்ப்பை ஒருபோதும் முன்னெடுக்க முடியாது. அதை அவர்களிடம் எதிர்பார்ப்பது மடமையாகும்.

அண்மையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில் 'யூ. என். பி. எதிர்ப்பு முன்னணிக்காக இடதுசாரிகளுடனும் இணைந்து செயல்பட தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார். அவர் இடதுசாரிகளுடன் இணைந்து செயல்பட முன்வந்துள்ளமை புதியதொரு விடயமல்ல, இது கடந்த காலங்களிலும் நடைபெற்றுள்ள சம்பவங்களேயாகும். ஆட்சியைக்கூட பாராளுமன்ற இடதுசாரிகளுடன் இணைந்து அவர் நடாத்தினர். இங்கே முக்கியமான பிரச்சினை எந்த அடிப்படையில் யூ. என். பி. எதிர்ப்பு ஐக்கிய முன்னணியை முன்னெடுப்பதுஎன்பதுதான். அண்மைக் காலங்களில்எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி [இடது] வற்புறுத்திவந்துள்ள யூ.என்.பி.க்கு எதிரான ஒரு பொது வேலைத்திட்டம் உருவாக்கப்படல் வேண்டும் என்பதே மிக முக்கியமானதாகும்.

இன்றைய நவகாலனித்துவ, பெரு முதலாளித்துவ அமைப்பு முறைக்கு பதிலாக தேசிய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பவும், தேசிய சுதந்திரத்தை நிலைநிறுத்திப் பாதுகாக்கவும், மக்களின் தேசிய அபிலாஷைகளை வென்றெடுக்கவும் சிறுபான்மையினரின் பிரச்சினைகளை நியாயபூர்மான வழிகளில் தீர்வுக்குக் கொண்டு வரவும், வெளிநாட்டுக் கொள்கையில் எந்த வல்லரசு முகாமுடனும் கூட்டுச்சேராது உறுதியான நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றவும் — சகல யூ. என். பி. எதிர்ப்பு கட்சிகளும் - இயக்கங்களும் ஏற்றுக்கொள்ளும் வகையிலான ஒரு பொது வேலைத் திட்டம் முன்வைக்கப்படல் வேண்டும். மேற்கூறப்பட்ட அடிப்படை அம்சங்களை உள்ளடக்கிய ஒரு பொதுவேலைத் திட்டத்தின் அடிப்படையிலேயே யூ. என். பி. யையும் அதன் கூட்டாளிகளாகவுள்ள ஏகாதிபத்திய நவகாலனித்துவ பிரரித்துவ சக்திகளையும் எதிர்த்துத் தோற்கடிக்க முடியும்.

இதைவிடுத்து வெறுமனே பாராளுமன்ற ஆசனங்களுக்கான ஒரு ஐக்கிய முன்னணி உருவாகுமானால் அதனால் யூ.என்.பி.யை ஒருபோதும் வீழ்த்த முடியாது. அவ்வாறான ஒருமுயற்சி பாராளுமன்ற இடதுசாரிகளுக்கு ஏற்கனவே பலதடவைகள் நல்ல பாடங்களைக் கற்பித்துவிட்டது. இன்றைய யூ.என்.பி. பழைய யூ. என். பி. அல்ல; வெறும் ஆசனங்களுக்கான வெற்றிதோல்வி மட்டும் மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியாது. நன்கு திட்டமிடப்பட்ட உறுதியான யூ.என்.பி. எதிர்ப்பு இயக்கமே எதிர்காலத்தில் மக்கள் அபிலாஷைகளை முன்னெடுக்கக்கூடிய ஒன்றாக அமைய வேண்டும். அதையே மக்களும் எதிர்பார்க்கின்றனர்.

# வரவு செலவுத்திட்ட விவாதத்தில் அரசின் குத்துவெட்டு அம்பலம்!

வரவு செலவுத் திட்டத்தையும் அதனையொட்டிய விவாதங்களையும் மக்கள் பாராதூரமாகக் கவனித்த காலம் மலையேறிவிட்டது. இன்று வரவு-செலவுத் திட்ட உரைகளும்விவாதங்களும்மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் சம்பந்தப் பட்டிருக்கவில்லை என்பதை உணர்ந்துவிட்டனர்.

இந்த வருடம் வரவு — செலவுத்திட்டம்பற்றி கோபமடைந்த மக்களின் கேலியும் கிண்டலும் ஒருபுறமிருக்க விவாதத்தின்போது ஏற்பட்ட சூட்டில் சில ஒளிக்கதிர்களும் தோன்றின. இக்கதிர்கட்கும் வரவுசெலவுத்திட்ட ஆலோசனைகட்கும் சம்பந்தம் ஏதுமில்லை. ஐக்கியதேசியக் கட்சிக்குள் சில நபர்கள் தத்தமது வண்டவாளங்களை பகிரங்கப்படுத்த எடுத்த முயற்சியாகவே இது அமைந்தது.

எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர்தான் பிரச்சினையைக் கிளப்பிவிட்டார் என்றபோதிலும் உட்கட்சி விவகாரம் அம்பலத்திற்கு வர, ஜனாதிபதியினதும் பிரதமரினதும் ஊதுகுழல்கள் குரலெழுப்பியமை குறிப்பிடத்தக்கதாகும். இறுதியில் வெற்றி யாருக்கு. உபாலி முதலாளிக்கா அல்லது அலோசியஸ் முதலாளிக்காஎன்பதை அரசு தரப்பு அங்கத்தவர்கள் கவனமாக அவதானித்து வருகின்றனர்.

தனது பதவிக்கு மோசம் வருகிறதென்பதை முன்கூட்டியே உணர்ந்து கொண்ட பிரதமர் பிரேமதாச, உப்பாலி விஜயவர்த்தன மேடைறேய எடுத்த சகல முயற்சிகளையும் நிராகரித்துவந்துளார். பல தடவை பாராளுமன்ற ஆசனங்களில் வெற்றிடங்கள் ஏற்பட்டபோதெல்லாம் அதில் நியமனம்பெற உபாலி முயற்சிகள் எடுத்தும் இதுவரை தோல்வியையே கண்டார்.

இப்போ உபாலியும் அவரது சூத்திரதாரியும் தமது இறுதி யுத்தத்திற்கு தயாராகிவிட்டார்கள். பிரேமதாசாவையும் ஜெனியையும் வெளிப்படையாகத் தாக்கும்படி புத்திகூறியதன் விளைவாக அவரும் தனது கைங்கரியத்தைபெருமளவில் ஆரம்பித்துவிட்டார்.

உபாலி தனது அபிலாசைகள் என்ன என்பதை ஒழிவுமறைவின்றி கூறியுளார். உடனடியாக நிதி அமைச்சராக வேண்டும் என்பது தனது விருப்பம் என்பதை அவர் தனது வாராந்த பத்திரிகை மூலம் உலகறியச் செய்துவிட்டார். 'ஐலண்ட்' என்ற நாமமுடைய இப்பத்திரிகையின் குரல் உபாலியின் குரல்தான்; உபாலியின் பத்திரிகைக்கும் யூ. என். பி. க்கும் கொள்கையளவில் வேறுபாடு கிடையாது பிரேமதாசாவையும் ஜெனியையும்விட யூ. என். யில் சகலதும் நல்லவையே என்பது அவர்கள் அபிப்பிராயம். இவர்கள் விலக்கப்பட்டு அவ்விடத்தில் உபாலிக்கு இடம்கிடைத்துவிட்டால் உபாலியின் பத்திரிகை அரசாங்கத்தை விமர்சிக்கஇடம் இல்லைப்போல் தெரிகிறது.

இலங்கை போன்ற ஒரு வறிய நாடு பிரேமதாசாவின் ஆகாசக்கோட்டைகள்போன்றதான கட்டிடங்களிற்குப் பணம் விரயமாவதைக் கண்டிக்கும்போது உபாலிசரியான கருத்தையே முன்வைக்கிறார். வீடமைப்பு அமைச்சின் கட்டிடத் திட்டங்கள் பலனற்ற வீண்விரயம் என்று கண்டிப்பது சரி. ஆனால் இங்கு இவர் விமர்சிப்பது கொள்கையா அல்லது நபர்களையா என்பது தான் கேள்வி. கோட்டைப் பாராளுமன்ற அமைப்பு சம்பந்தமான வீண்விரயம்பற்றியோ மகாவலி அமைச்சின் வீண்செலவுகள் பற்றியோ அவர் மௌனம் சாதிப்பது ஏன்?

இது நிச்சயமாக சரியான கொள்கைக்கும் தவறான கொள்கைக்கும் எதிரான போராட்டமல்ல அல்லது கோட்பாடுபற்றிய பிரச்சினையும் அல்ல. இது ஐக்கிய தேசியக்கட்சிக்குள் ஓர் வயது சென்ற தலைவர்டமிருந்து பதவியை கைப்பற்ற இருகோஷ்டிகள் நடாத்தும் நாய்கடி பூனை கடியேயாகும்.

வெகுஜனங்களை பொறுத்தவரை இச்சண்டை எந்த வித பலனையும் தரப்போவதில்லை. ஆனால் பாராளுமன்றத்தின் பெரும்பான்மையையும் எதிர்க்கட்சியின் பலவீனத்தையும் கொண்டு பலமுள்ளதாக தோற்றமளிக்கும் கட்சியின் பலவீனத்தைஅம்பலப்படுத்த உதவுகின்றது.

யூ. என். பி.க்குள் ஏற்பட்டுள்ள சண்டை இருமுதலாளிக்கோஷ்டிகளுக்கிடையிலான சண்டைதான். ஒரு கோஷ்டி தம்மை சாதிசனத்திலுள்ள பெரியவர்களாகவும் மற்றவர்களை அடிமை குடிமைமுறையில் வந்த 'கழிசடை'களாகவும் நினைத்துக் கொள்கின்றனர். ஆனால் பொதுமக்களைப் பொறுத்தவரை நீருக்கும் நெருப்புக்கும் இடையில் அகப்பட்டோர் நிலைதான். உபாலி முதலாளி வந்தால் என்ன அலோசியஸ் முதலாளி வந்தால் என்ன இரண்டும் ஒன்றுதான் வேற்றுமை உண்டென்று கூறுவதானல் உபாலியின் குதிரைகள் இங்கிலாந்தில் ஓடும். அலோசியஸின் குதிரைகள் ஓடா.

# சோவியத் யூனியனுக்கு தளம்வேண்டுமாம்

## தருமலிங்கம் ஆவல்!

சோவியத்—அமெரிக்க மேலாதிக்க வல்லரசுகளின் ஆதிக்கப்போட்டியினால் உலகின் சகல பிரதேசங்களிலும் பதட்டநிலை வளர்ந்து வருகின்றன. தென்னாசிய நாடுகளில் எவ்வாறு தமது பிடிகளை உருவாக்கி வல்லரசுப் போட்டிக்கு வழிசமைக்கலாம் என்பதே அவர்களது நோக்கமாகும். இந்த அடிப்படையில் நமது நாடும், அதன் மூக்கிய துறைமுகமான திருகோணமலையும் இந்த வல்லரசுகளின் கண்களை உறுத்திக்கொண்டிருக்கின்றன.

அண்மையில் யூ.என்.பி. அரசாங்கம் அமெரிக்கஏகாதிபத்தியத்துடன் ஒரு இரகசிய ஒப்பந்தத்திற்கு வந்து திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்கா பாவிப்பதற்கான இணக்கம் காணப்பட்டுளது. இருபத்தைந்து வருட கால ஒப்பந்தம் என்றும் கூறப்படுகின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு இவ்வாறான ஒரு வசதி செய்து கொடுக்கப்பட்டமை மிகவும் கண்டிக்கப்படவேண்டிய ஒன்றேயாகும். ஏனெனில் நமது நாடு ஒரு பின்தங்கிய மூன்றும் உலகநாடாகும். நாம் எந்த வல்லரசுமுகாமுடனும் எமது கொள்கைகளை இணைத்துக்கொள்ளாது நடுநிலைக் கொள்கையை உறுதியாகப் பின்பற்றி தேசிய பொருளாதாரத்தையும் தேசிய சுதந்திரத்தையும் உறுதி செய்து கொள்ளல்வேண்டும். நமது நாடு வல்லரசுப்போட்டிக்குள் சிக்கி எந்த ஒரு வல்லரசுக்கும் தளமாக அமைந்துவிடக் கூடாது. இதுவே இலங்கை மக்கள் அனைவரினதும் விருப்பமாகும். இதனாலேயே சுதந்திரத்திற்குப் பின்பும் திருகோணமலையிலிருந்த பிரித்தானியத்தளத்தை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அவர்கள் அகற்ற முடிவுசெய்தபோது மக்கள் அதற்கு பூரண ஆதரவு கொடுத்தனர். அன்று பிரித்தானிய தளத்தை திருகோண

(6 ஆம் பக்கம் பார்க்க)

# 70ரூபா சம்பள உயர்வை எவ்வாறு வென்றெடுப்பது?

ஒரு வருடத்திற்கு முன் ஏனைய அரச ஊழியருக்கு வழங்கப்பட்ட 70 ரூபா சம்பள உயர்வைத் தோட்டத் தொழிலாளர்கட்கும் பெற்றுக் கொடுப்பதே இன்று உள்ள முக்கிய பிரச்சினையாகும். தோட்டத் தொழிலாளர்களுக்கு இச் சம்பள உயர்வை மறுக்கும் அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு அண்மையில் 107 சம்பள உயர்வு வழங்கியதால் தோட்டத் தொழிலாளர்களின் நிலை மேலும் மோசமடைந்துளது.

தோட்டத் தொழிலாளர்கள் விடயத்தில் அரசாங்கம் மோசமாக நடந்துகொள்வது ஏன்? பெரும் தோட்டத் துறையானது பாரிய நஷ்டத்திற்கு உள்ளாகியுள தால் அவற்றை நிர்வகிக்கும் கூட்டுத்தாபனங்கள் இந்த சம்பள அதிகரிப்பை வழங்க பணம் இல்லை என்று கூறுவதை அரசு ஒரு நொண்டிச் சாட்டாக முன்வைக்கிறது.

இது எவ்வளவு போலி வாதம் என்பதை எவரும் புரிந்து கொள்வர், அரசாங்கத்தால் நடாத்தப்படும் பஸ் சேவையால் ஒருநாளைக்கு 20 இலட்சம் ரூபா நட்டம் ஏற்படுகிறது. அப்படி இருந்தும் பஸ் ஊழியர்களுக்கு 70 ரூபா சம்பள உயர்வு கொடுக்க அரசாங்கம் பணம் எடுக்கவில்லையா? இதேபோல் புகையிரதப் பகுதியும் பெரு நட்டத்தில் இயங்கிவருகிறது. ஆனால் புகையிரத பகுதி ஊழியர்களுக்கு 70 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டது. 107ரூபா சம்பளவுயர்வு வழங்க அரசு முன்வந்துளது. உண்மையில் இச்சம்பள அம் கரிப்புகள் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுக்கு எவ்வகையிலும் ஈடுசெயய்ய முடியாதவையே.

எனவே 70 ரூபா அதிகரிப்பையும் 107 ரூபா அதிகரிப்பையும் தோட்ட தொழிலாளருக்கு வழங்காதிருப்பதற்கு தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவது என்பது தகுந்த காரணமாக இருக்க முடியாது. இது ஒருபுறம் இருக்க தோட்டங்கள் நஷ்டத்தில் இயங்குவதற்குப் பொறுப்புதாரிகள் யார்? தவறான முகாமைத்துவத்திற்கும் தோட்டங்களின் ஊழல் தலைவிரித்தாடுவதற்கும் தோட்டத் தொழிலாளர்கள் பொறுப்புதாரிகளா? திறமையற்றவர்களையும், ஊழற்காரரையும் எந்த வழியிலும் தண்டிக்கட்டும். ஆனால் இந்த நிலைக்குதோட்டத் தொழிலாளர்களைத் தண்டிப்பதற்கு அரசாங்கத்திற்கு என்ன அருகதை உண்டு?

பிரதான ஓட்டத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். ஏனைய தொழிலாள வர்க்கத்தினரோடு ஒன்றிணைவது தடை செய்யப்பட்டுளது. இலங்கையின் ஏனைய பகுதி தொழிலாள வர்க்கத்தோடு பத்து இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் முழுமையாக இணைந்துவிட்டால் சுரண்டும் வர்க்கங்களின் எதிர்காலம் எவ்வளவு பயங்கரமானதாய் இருக்கும். ஜே. ஆர். அவர்களோ அல்லது ஸ்ரீமாவோ அவர்களோ பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்க சக்திகளுக்கு இது பாரதூரமான ஆபத்தாக அமைந்துவிடும். இவர்கள் சிங்களப்பகுதித் தொழிலாளர்களோடு கைகோத்து நின்று ஒரு தொழிலாள வர்க்க அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்காகப் போராடுவார்களேயானால் தொண்டமானால் தொடர்ந்தும் தவறான தலைமை கொடுத்து ஏமாற்ற முடியாத நிலையே ஏற்படும்.

**எச். எல். கே. கரவிட்ட**
செங்கொடிச் சங்கத் தலைவர்,
உழைக்கும் மக்கள் கட்சிப் பொதுச்செயலாளர்.

தோட்ட தொழிலாளருக்கு 70 ரூபா சம்பள அதிகரிப்பு மறுக்கப்பட்டு வருவதற்கான உண்மைக்காரணத்தை வேறு வகையிற் பார்க்க வேண்டும். தோட்டத்தொழிலாளர்கள் பணிவானவர்கள், ஏனைய அரசாங்க ஊழியர்களிலும் பார்க்க பலவீனமானவர்கள் என நினைத்து அரசாங்கம் இவர்களின் உரிமைகளையும் கோரிக்கைகளையும் தட்டிக்கழிக்கலாம். ஏன் உதாசீனம் செய்துவிடலாம் என்றுகூட அரசாங்கம் நினைக்கிறது.

தோட்டத்தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் இந்திய வம்சாவழியினர். இவர்கள் வேண்டுமென்றே இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக வாழ்வின்

தோட்டத் தொழிலாளர்கள் இந்த 70 ரூபா அதிகரிப்பைப் பெறுவது எப்படி? இந்தக் கேள்விக்கான பதிலை உண்மை நிலையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். பெருந்தோட்டங்களின் இரு பெரிய தொழிற்சங்கங்களின் தலைவர்கள் மந்திரிகளாகவுள்ளனர். தோட்டத் தொழிலாளர்கள் பெருமளவில் வாழும் தொகுதிகளை இவர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். இவர்களது அமைச்சில்வேலை செய்யும் ஊழியருக்கு 70 ரூ. அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. தொண்டமானும், காமினிதிசநாயக்காவும் தமது தொழிற்சங்க அங்கத்தவர்களுக்கு 70 ரூபா அதிகரிப்பைப் பெற்றுக்கொடுக்க அக்கறையற்றவர்களாக உள்ளவரே என்றும் ஊகிக்கலாம். இவ்வாறான ஊகம் தவறானதாகும். ஏனெனில் 70 ரூபா சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுத்து அதனால் பெருமைப்படுவதற்கு இவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் நண்பர்கள் அல்லவே. நண்பர்களாக இருந்தால் மட்டுமே சேவை செய்வர். தோட்டத்தொழிலாளர்கட்கு 70 ரூபா அதிகரிப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு தொண்டமானும் காமினி திசநாயக்காவும் ஆவல் கொண்டிருப்பதாக யாரும் கூறலாம். ஆனால் அவர்கள் அரசாங்கத்திற்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தவோ அல்லது இந்தக் கோரிக்கையை வென்றெடுக்கும் போக்கில் அரசாங்கத்தில் தமது பதவிகளை இழக்கவோ தயாராக இல்லை. இங்குதான் அவர்களுக்கும் ஏனைய தொழிற்சங்கத்திற்குமிடையே உள்ள வித்தியாசம் தென்படும். அவர்களும் 70 ரூபா கோரிக்கைக்கு ஆதரவு என்றபோதும் அரசாங்கத்துள் இருக்கவேண்டுமென்ற விருப்பம் இந்தக் கோரிக்கையிலும் பார்க்க மேலோங்கி நிற்கிறது. எனவே தோட்டத் தொழிலாளருக்கு 70 ரூபா சம்பள அதிகரிப்பு என்பது இவர்களுக்கு இரண்டாம் பட்ச நலனாகும். எவ்வாறாயினும் இவர்களின் போக்கு இத்தகு கோரிக்கை

(5-ம் பக்கம் பார்க்க)

## மலையகச் செய்திகள்

### நாங்கள் !

நாங்கள் சிந்தும்
வியர்வையின்
மணமே !
தேனீரின்
நறுமணம்!
நாங்கள்
சிந்தும்
உதிரமே
தேனீரின்
செஞ்சாயம் !
எங்களின்
இருண்ட
வாழ்வினைப்
பிரதிபலிப்பதே
தேனீரின்
கறுப்பு
நிறம் !

—தோழன்

## உள்ளதும் நல்லதும் - உரையாடல் 4

முத்தையன்: என்ன தோழரே! இவ்வளவு அவசரமா வாரீங்க

கண்ணையன்: நம்ம பெத்தான் தோழர் இருக்காரே, அவரு இந்தியா போகப் போரேன்னு. பாஸ்போட்டுக்கும் பிரவுடன் பண்டுக்கும் படுகிற அவசரத்த பார்த்தவுடன் நானும் அவசரப்பட்டு வந்தேன்

முத்: அது தானுங்களே, நானும் இவ்வளவு நேரமா யோசிச்சிக்கிட்டு இருக்கின்றேன். தோட்டத்துல முக்கால்வாசி தொழிலாளிங்க இந்தியா இந்தியான்னுதான்பேசிக்கிட்டு இருக்குராங்க.

கண்: இது ஒரு இனத்தோடு ஒரு இனம்சேர்ந்து வாழ முடியாதுங்கர நிலைமையைத்தான் காட்டுது. இந்த பிற்போக்கான அரசியல்வாதிகள் நாட்டை மிகப் பிற்போக்கான நிலைக்குக் கொண்டுசெல்லுருங்க அதேநேரத்துல பொருளாதாரப் பிரச்சினைகள் தலைதூக்க பொலீசுக்கு சம்பளத்த கூட்டுற அரசாங்கம் தோட்டத் தொழிலாளிகளுக்கு அந்த சம்பளத்தைக் கூட்ட முடியாம இருக்கிறபோது இந்தமாதிரியான வன்செயல்கட்குப் புத்துயிர் கொடுக்கிறது வழக்கமாகிக்கிட்டு வருதுங்க தோழரே.

முத்: நீங்க சொல்ரது உண்மைங்க தோழரே, அப்படி சம்பளவுயர்வுபத்தியே கனவும் நினைவுமாக இருக்கிற தொழிலாளிங்களோட சிந்தனையதிசை திருப்புரதுக்குத்தான் முதலாளித்துவ அரசியலின் அடிப்படையே அதுதானுங்களே.

கண்: அந்த திசை திருப்பு இனக்கலவரமாக மாறி அது முடிஞ்சவுடன இப்போ இந்தியா இந்தியானு தோட்டத்தொழிலாளிங்களோட கவனம் திரும்பியாச்சி. இந்த நிலைமையில் சம்பளவுயர்வுபோன்ற பிரச்சினைகளை அரசாங்கம்கொஞ்ச நாளைக்கு ஒத்திபோடலாமுங்க தோழரே......

முத்: அதுதான் அதுவுள்ள 'சஸ்பென்சுங்க' தோழர் அதுக்காக இனப்பிரச்சினைக்கு இந்தமாதிரி ஊக்குவிப்பு நடக்குமே தவிர தீர்க்கமுடியாதுங்க இந்த ஆளுரவங்களால.

கண்; அதுதானுங்க உண்மை. அதுக்கு வட பிரதேசத்துல குடியேற வவுனியாவுக்கு நெலம் எடுக்கப்போரென்னு நம்ம தொழிலாளிங்க சொல்லிக்கிட்டு இருக்குராங்களே தோழர்

முத்: ஆமாங்க அந்த விசயமும் இப்ப கலவரம் முடிஞ்சவுடன் காதுல அடிபடுது. பிற்போக்கான நாட்டில் பலஇனம் கவாழுர நாட்டுல எந்த மூலையிலும் இதுமாதிரி இனக்கலவரம் தவிர்க்க முடியாம போயிரலாம்.

கண்: அப்போ இந்தியா போரதுதான் சரீங்க நீங்களா

முத்: அங்க இப்போ 'தமிழ் நாடு' 'தமிழரசாங்கம்' அப்படின்னு சொல்லிக்கிட்டு போவோம். நாளைக்கு ஏனைய பெர தேசத்துலையும் அதாவது கர்நாடகம் ஆந்திரா போல பகுதிகளில் மக்கள் தொகை அதிகரிச்சா பிரதேசத்துக்குபிரதேசம் கலவரம்நடக்குங்க. அது இன கலவரமாகத்தான் வருமுன்னோ, பெரதேச கலவரமுன்னோ சொல்ல முடியாது.

கண்: அதுதானுங்க நம்ம ஆளுங்களுக்கு நாமவிளக்கமா சொல்லிடனும்

முத்: இனங்களோட இனம் சேர்ந்து வாழ முடியுங்க தோழரே, ஆளுரவங்க "ஊரு ரெண்டுபட்டா கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" அதுபோல ஊர ரெண்டா வச்சிருந்தா — இனங்களோட இனம் இணையாம வச்சிருந்தாதானே அவுங்களுக்கு லாபமுங்க;

கண்ணை: இனிமே அதை உணர்ந்து நாம இனங்களோட தோழமையோடு வாழ்ந்து ஒரு சோஷலிச அரசாங்கத்துலதான் இது மாதிரியான இனப் பிரச்சினைக்கு தீர்வு உண்டு; அதை உணரவாம். ஏங்க தோழரே.

முத்: ஆமாங்க, அதுதான் சரிங்க.

## மலையகத்தில் ஆசிரிய நியமனம் யாருக்கு?

பல முறை இழுத்தடித்து ஒருவாறு சென்ற மாதம் 20 ஆம் திகதி ஆசிரியர்கள் நியமனத்திற்கான வர்த்தமானி விண்ணப்பம் தாங்கி வெளியானது. ஏதடா எதிர்காலத்தில் நாம் எல்லாம் மலையக ஆசிரிய நியமனங்களை பெற்றுவிடலாம் என மலையகத்தில் பத்தாம், பன்னிரண்டாம் வகுப்புக்களில் சித்திபெற்ற பலர் காத்திருந்தனர்.

நடந்தது என்ன? பத்தாம் வகுப்பினர்க்கு அல்லாமல் 12ஆம் வகுப்பினர் மாத்திரம் ஆசிரியர்களாக நியமிக்கப்போவதாக வர்த்தமானி கூறியது. இது பத்தாம் வகுப்பினரின் வயிற்றில் விழுந்த பலமான அடி. ஆனால் "சொல்லின் செல்வர் செல்லச்சாமி பத்தாம் வகுப்பினர்க்கு இன்னுமொருவர்த்தமானி மூலம் கோரப்படுவதாக கூறியிருந்தார். இந்த சொல்லை நம்பி பலர் விண்ணப்பிக்காது விட்டனர். அவ்வாறு மீண்டும் வர்த்தமானி வருமா? என்பதே கேள்வியாகும்.

இனி இதுவரை வெளிவந்துள்ள வர்த்தமானியின் படி 12 ஆம் வகுப்பினரில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், விவசாயம், நடனம், சங்கீதம் முதலான ஆசிரியர்கள் எடுக்கப்போவதாகக் கூறியிருந்தது. இதன்படி மலையகத்தில் எந்தப் பாடசாலையில் நடனமும், சங்கீதமும் நடைபெறுகிறது. 12-ஆம் வகுப்பில். எனவே இந்த இரண்டுபாட ஆசிரியர் நியமனம் யாருக்கு?

அடுத்து ஆங்கில பாடம் உயர்தரத்தில் சித்திபெற்ற மலையக மாணவனும் இருக்க முடியாது. கணிதம், விஞ்ஞான பாடங்கட்கு உயர்தர சித்தி வேண்டுமாம். இது மலையகத்தில் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு கூற்று. 10 ஆம் வகுப்பானல் பௌதிகம், இரசாயனம் போன்ற விஞ்ஞான பாட சித்திவேண்டுமாம். இந்த பாடங்களைக் கற்பிக்க மலையக பிரதான இரண்டொரு நகரைதவிர்ந்த ஏனைய பகுதி மாணவர்கள் இந்த பாடப்பெயர்களை கூட கேள்விப்பட்டிருக்கமாட்டார்கள். இதுபோலவே விவசாய ஆசிரியர்களுக்கு கேட்கப்படும் விசேட தகுதிகள் மலையக மாணவர்களின் கழுத்தை நெரித்துப் பிடிக்கின்றது.

எனவே மலையக இளைஞர் யுவதிகளே! ஆசிரியநியமனம் நடைபெறமுன்னமே ஆசிரிய பதவிக்காக போராட தயாராகுங்கள்; வெளிமாவட்ட ஆசிரியர்களை இனி மலையகத்தில் அனுமதியாதீர். எனவே சகல முற்போக்கு இயக்கங்களும் ஒன்றுகூடி போராட்டக்குரல்மூலம் அதிகமான மலையகத் தோட்டதொழிலாளக் குழந்தைகள் ஆசிரிய நியமனம்பெற வாய்ப்பை ஏற்படுத்த ஒன்றுபட்டகுரலை முன்னெடுக்கவேண்டும்.

# பாரதியார் நூற்றுண்டு தின காலத்தில் பாரதி பற்றிய சரியான ஆய்வு தேவை



### பேராசிரியர் கைலாசபதி வேண்டுகோள்!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார், தனியே கவிதைகள் மட்டும் புனைந்த ஒரு கவிஞர் அல்லர். அவர் இந்திய தேசிய விடுதலை இயக்க ஓட்டத்தின் மத்தியில் பல கட்டுரைகளையும் சிறுகதைகளையும் ஆக்கியுள்ளார். அவரது முழு ஆக்கங்களும் நூல் வடிவில் இதுவரை வெளிக்கொணரப்படவில்லை. இப்பொழுதுதான் அதற்கான முயற்சிகள் தமிழ் நாட்டில் செய்யப்படுகின்றன. பாரதியார் நூற்றுண்டு தின வருடம் பிரகடனம் செய்யப்பட்டுள்ள இந்தவேளை நாமும் இலங்கையில் பாரதியாரை முழுமையாகவும், சரியாகவும் அணுகும் பல முயற்சிகளைச் செய்தல் வேண்டும். இதில் முக்கியமானது பாரதியின் காலகட்டத்தையும் அக்காலகட்டத்தில் அவரது ஆக்கங்கள் வகித்த பாத்திரத்தையும் சரியான ஒரு ஆய்வுக்கு உட்படுத்துவது அவசியமாகும். இன்றையநிலையில் இத்தகைய ஒரு சரியான ஆய்வு காலத்தின் தேவையாகஇருக்கின்றது. இப்பணியை தேசிய கலை இலக்கியப் பேரவையின் மூலம் நிறைவேற்ற எம்மாலான சகல முயற்சிகளையும் செய்தல் அவசியமாகும்.

மேற்கண்டவாறு பேராசிரியர் க. கைலாசபதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் தேசிய கலைஇலக்கிய பேரவை நடாத்திய பாரதி நூற்றுண்டு தின ஆலோசனைக் கூட்டத்திற்கு தலைமைவகித்து உரையாற்றும்போது கூறினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு பல்வேறு துறைகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள், கலைஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள், தொழிலாளர்கள், விவசாயப் பிரதிநிதிகள் வருகைதந்திருந்தனர். பாரதி நூற்றுண்டு தினத்தை அடுத்த வருடம்முழுவதும் பரவலான பல நிகழ்ச்சிகள்மூலம் கொண்டாட வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு வகையான ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.ஏ. நுஃமான் தனது ஆலோசனையை முன் வைத்தபோது பாரதியாரை நாம் நினைவு கூரும்போது நமக்கு ஒரு சரியான நோக்கு இருக்கவேண்டும். பாரதியாரின் ஆக்கங்களை நாம் பார்க்கும் பார்வையில் மட்டுமன்றி மக்கள் மத்தியிலும் பரவலாகக் கொண்டுசெல்லவும் வேண்டும். எல்லா முயற்சிகளுடனும் முக்கியமாக தேசிய கலைஇலக்கிய பேரவை ஒரு நூல் வெளியீட்டைசெய்வது அவசியமான ஒருவேலை என்றும் குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய திரு. சி. மௌனகுரு தனது கருத்துரையில் பாரதியாரின் பல ஆக்கங்கள் மக்கள்மத்தியில் கொண்டு செல்லப்படவில்லை. மிக எளிமையாகவும சாதாரண மக்களின் சார்பாகவும் உள்ள பாரதியாரின் பல ஆக்கங்கள் இன்றும் பிரபல்யம் பெருமல் இருக்கின்றன, அவற்றை நாம் பல்வேறுவழிகளில் வெளிக்கொண்டுவரும் முயற்சிகளை பாரதிநூற்றுண்டுவின வருடத்தில் செய்ய வேண்டும் அதேபோல் அவரது கவிதைகளைப் புதிய வழிகளில் புதிய முயற்சிகளினூடே மக்கள் மத்திக்குக் கொண்டு செல்லல்வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அடுத்து ஆசிரியர் ம. சண்முகலிங்கம் கூறுகையில் பாரதியார்பற்றிய ஆய்வைத் தொடர் கருத்தரங்குகளாக நடாத்துவதுடன் கிராமமட்டத்திற்கு அவற்றை எடுத்து செல்வது அவசியம். அத்துடன் நாடகங்களையும் உருவாக்கவேண்டும் என்றுகூறிய அவர் பாரதியார்பற்றிய அல்லது அவரது ஆக்கங்களை மையமாகக்கொண்ட நாடகங்களை பலரும் எழுத முன் வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மற்றும் ஆசிரியர் வி. லோகநாதன் ஆசிரியர் என். ரவீந்திரன், எஸ். தர்மகுலசிங்கம் (பூமகன்)எஸ்.ராஜேந்திரன், வி.எம் குகராசா ஆசியர் எஸ். சிதம்பரநாதன் உட்பட பலர் கருத்துரை வழங்கினர். முடிவில் ஆய்வரங்கு நூல்வெளியீடு, நாடகங்கள் சனசமூகநிலையங்கள் — மன்றங்களுக்கிடையிலான போட்டிகள் நிதிசேர்த்தல் என்பனவற்றுக்கான உபகுழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

எஸ். தேவராஜா, கே. தணிகாசலம்ஆகிய இருவரும் இணைச் செயலாளர்களாகச் செயற்படுவார்கள்.

## பாரதியாரின் புதிய ஆத்திசூடி

1. அச்சம் தவிர்
2. ஆண்மை தவறேல்
3. இளைத்தல் இகழ்ச்சி
4. ஈகை திறன்
5. உடலினை உறுதிசெய்
6. ஊண் மிக விரும்பு
7. எண்ணுவது உயர்வு
8. ஏறுபோல் நட
9. ஐம்பொறி ஆட்சிகொள்
10. ஒற்றுமை வலிமையாம்
11. ஓயதல் ஒழி
12. ஔடதம் குறை
13. கற்றது ஒழுகு
14. காலம் அழியேல்
15. கிளை பல தாங்கேல்
16. கீழோர்க்கு அஞ்சேல்
17. குன்றென நிமிர்ந்துநில்
18. கூடித்தொழில் செய்
19. கெடுப்பது சோர்வு
20. கேட்டிலும் துணிந்துநில்
21. கைத்தொழில் போற்று
22. கொடுமையை எதிர்த்து நில்
23. கோல் கைக்கொண்டு வாழ்
24. கவ்வியதை விடேல்
25. சரித்திரத் தேர்ச்சிகொள்
26. சாவதற்கு அஞ்சேல்
27. சிதையா நெஞ்சுகொள்
28. சீறுவோர்ச் சீறு

—தொடரும்

## பாரதியார் கவிதைகளில்



நெஞ்சு பொறுக்கு திலையே — இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்
அஞ்சி யஞ்சிச் சாவார் — இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே;
வஞ்சனைப் பேய்கள் என்பார் — இந்த
மரத்தில் என்பார்; அந்தக் குளத்தில் என்பார்
துஞ்சுது முகட்டில் என்பார் — மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார்——நெஞ்சு

நெஞ்சு பொறுக்கு திலையே — இதை
நினைந்து நினைந்திடினும் வெறுக்குதிலையே;
கஞ்சி குடிப்பதற் கிலார் — அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே — நிதம்
பரிதவித்தே உயிர்துடிதுடித்தே
துஞ்சி மடிகின்றாரே — இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியில்லையே—நெஞ்சு

எண்ணிலா நோயுடையார் — இவர்
எழுந்து நடப்பதற் ம் வலிமையிலார்
கண்ணிலாக்குழந்தைகள்போல் — பிறர்
காட்டிய வழியில் சென்று மாட்டிக்கொள்வார்
நண்ணிய பெருங்கலைகள்—பத்து
நாலாயிரங் கோடி நயந்துநின்று
புண்ணிய நாட்டினிலே — இவர்
பொறியற்ற விலங்குகள்போல் வாழ்வார்—நெஞ்சு

★ ★

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை.

மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனி உண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனி உண்டோ?

இனியொரு விதிசெய்வோம் — அதை
எந்த நாளும் காப்போம்;
தனி ஒருவனுக்கு உணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்!

எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம்
எல்லோரும் இந்தியா மக்கள்
எல்லோரும் ஓர்நிறை எல்லோரும் ஓர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லோரும் இந்நாட்டு மன்னர்!

★ ★

## லூசுன் கூட்டங்கள்

நவீன சீன இலக்கியத்தின் முன்னோடியான லூசுன் அவர்களின் நூற்றுண்டுதினக் கூட்டங்களை யாழ்ப்பாணம், கொழும்பு, மலையகம் ஆகிய பிரதேசங்களில் தேசிய கலை இலக்கிய பேரவை நடாத்தியது. இக்கூட்டங்களில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த இலக்கியவாதிகளும், எழுத்தாளர்களும், கலைஞர்களும் தொழிலாளர்களும், விவசாயப் பிரதிநிதிகளும், மாணவர்கள் புத்திஜீவிகளும் கலந்து கொண்டனர். மூன்று பிரதேசங்களிலும் நடைபெற்ற லூசுன் அவர்களின் நூற்றுண்டு தினக் கூட்டங்களில் பேராசிரியர் க. கைலாசபதி எம்.ஏ. நுஃமான், க. நடனசபாபதி, சி.வி வேலுப்பிள்ளை எச். எம்.பி. முஹைதீன், சே. செந்திவேல் என். இரவீந்திரன் வி. விஜயரத்தினம், வி. பன்னீர்ச்செல்வன் எஸ். சிங்கராயர் ஆகியோர் உரையாற்றினர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் லூசுன் அவர்கள் எழுதிய 'வழிப்போக்கன்' நாடகமும் இடம் பெற்றது. லூசுனின் படைப்புக்கள் அடங்கிய பல புத்தகங்கள் விற்பனைக்கும் அவரது வாழ்க்கையினை எடுத்துக்காட்டும் படங்கள் காட்சிக்கும் வைக்கப்பட்டிருந்தன.

சீனநவீன இலக்கியத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டியவரான லூசுனின் நூற்றுண்டு தினத்தை ஞாபகம்செய்துஅவரது இலக்கிய ஆக்கங்களை முடிந்தளவுக்கு ஆறுமுகம் செய்ய முன்வந்த தேசிய கலை இலக்கிய பேரவை பாராட்டப்பட வேண்டிய ஒரு இலக்கியஸ்தாபனமாகும். அதன் பணி தொடர்ந்தும் வளரவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

4-ம் பக்கத் தொடர்...

கட்கு எதிரானது எனக்கருதி விட முடியாது.

உண்மை என்னவென்றால் இவர்கள் எழுபது ரூபா அதிகரிப்பைத் தோட்டத் தொழிலாளருக்குப் பெற்றுக் கொடுக்க முடியாது. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் கதைத்தோ அல்லது மந்திரிகள் என்ற செல்வாக்கை வைத்தோ செய்ய முடியாது. மந்திரிகளாகத் தொடர்ந்து இருப்பதற்கு விரும்பினால் அவர்கள் தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக நிர்வாகத்தின் பக்கம் சாயவேண்டியுளது.

இந்த கோரிக்கையைப் போராட்டத்தின் மூலமாகவே வென்றெடுக்க முடியும் என்ற பாடத்தை நாம் கற்றுக் கொள்ள முடியும். இந்தப் போராட்டத்தைத்தோட்டத் தொழிலாளர்கள் தாமே நடாத்த வேண்டும். அத்துடன் போராட்டத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு ஏகப்பெரும்பான்மையான தோட்டத் தொழிலாளர்களை அணிதிரட்ட வேண்டும்.

சகல தோட்ட தொழிற் சங்கங்களும் அவற்றின் அங்கத்தவர்களுக்கு இந்த சம்பள அதிகரிப்பைப் பெற்றுக் கொடுப்பதில் அக்கறை கொண்டுள்ளன என்ற அடிப்படையில் இதை நோக்க வேண்டும். தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பான்மையானவர்கள் இரண்டு அரசாங்க சார்பு தொழிற் சங்கங்களின் அங்கத்தவர்களாக உள்ளனர். இந்தச் சூழ்நிலையில் குறிப்பிட்ட இரு சங்க அங்கத்தவர்களையும் இந்தப் போராட்டத்தில் சேர்த்துக் கொள்ளாவிட்டால் வெற்றிகரமான போராட்டத்தில் ஈடுபட முடியாது.

இந்தப் போராட்டத்தில் எந்த ஒரு தோட்டத்தொழிலாளியும் பங்குபற்றுமல் விடுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படாத வகையில் போராட்டம் அமைந்திருக்கவேண்டும் இதுதான் எமது இலக்கு என்றால் எந்த ஒரு சங்கமும் ஒரு புள்ளியைப் பெறவோ அல்லது வேறு ஒரு சங்கத்தைவிட சுலபமாக செல்வாக்கைப் பெறவோ முடியாதபடி போராட்டத்திற்கு ஒத்துழைப்பு இருத்தல்வேண்டும். இந்தப் போராட்டத்திலிருந்து எந்த ஒரு சங்கமாவது விலகி இருப்பதற்கு காரணமில்லாதபடி எமது திட்டம் இருத்தல்வேண்டும்.

இந்த கோரிக்கை தொடர்பாக முன்னைய போராட்டங்களினூலும் கிளர்ச்சியினுலும் பல அனுபவங்கள் கிடைத்துள்ளன. யார் தலைமைதாங்குவது யார்கூட்டுவது, யார் பத்திரிகைக்கு அறிக்கை விடுவது என்ற சிறு விடயங்களில் உடன்பாடு இல்லாதிருந்திருக்கிறது. இந்த விடயத்தில் சுலபமான விளம்பரத்தைப் பெற சிலர்முயன்றுள்ளனர், ஆனுல் தொழிலாளர்கள் 70 ரூபா அதிகரிப்பைத்தான் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

நாம் உண்மையில் இந்த கோரிக்கையை வென்றெடுக்க வேண்டுமாயின் அவரவர் அங்கத்துவம் வகிக்கும் சங்கங்களுக்கு மதிப்புக் கொடுத்து ஒரு சங்கத்தை வேருெருசங்கம் தனது நலனுக்கு பாவிக்காதபடி தோட்டத் தொழிலாளர்கள் அனைவரையும் அணிதிரட்ட வேண்டும் ★

# போலந்து- விவகாரங்களை மக்களே தீர்க்கவேண்டும்

போலந்து நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை உலக மக்களால் உற்றுநோக்கப்படுகிறது. அங்கு இராணுவச் சட்டம் அமுலாக்கப்பட்டு பல ஆயிரக்கணக்கான மக்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். பலர் இரகசியமாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இன்னும் பலர் மோசமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு சுய உணர்வற்ற நிலையில் உள்ளனர். சுதந்திரதொழிற்சங்கத் தலைவர் வலேசாவும் மற்றும் பல தொழிற்சங்கத் தலைவர்களும் இடம் குறிப்பிடப்படாத இடங்களில் சிறைவைக்கப் பட்டுள்ளனர். இவ்வளவுக்கும்போலந்து ஆட்சியினரின் பின்னாலிருந்து இயக்குவிப்பவர்கள்சோவியத் சமூக ஏகாதிபத்தியவாதிகளே என்பது உலகறிந்த உண்மையாகும். அங்கு 'எதிர்ப்புரட்சி' ஏற்பட்டுளது எனவும் தாங்கள் ''சோஷலிசத்தைப்'' பாதுகாக்கவே இவ்வாறு போலந்தில் செய்து வருவதாகவும் உத்தியோக பூர்வமற்ற அறிக்கைகளில் சோவியதுவாதிகள் கூறிவருகின்றனர், ஆனால் இது தலையீட்டுக்கும், ஆக்கிரமிப்புக்கும் கூறப்படும் சாட்டுகளே யாகும். ஒருநாட்டின் மக்கள்தான் தமது நாட்டிற்கு எத்தகைய அமைப்பு வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமையுடையவர்களே அன்றி அந்நிய நாடு ஒன்று எவ்விதமாகவும் தீர்மானிக்க முடியாது. அமெரிக்க ஏகாதிபத்தியம் சனநாயகத்தைப் பாதுகாக்க மற்றொரு நாட்டின்மீது தலையிட்டால் அது எவ்வளவுக்கு ஆக்கிரமிப்பு ஆகுமோ அதே போலவே சோவியத் ஏகாதிபத்தியமும் 'சோஷலிசத்தை' பாதுகாக்க வேறொரு நாட்டின் மீது தலையிடுவதும் ஆக்கிரமிப்பேயாகும். எனவே போலந்து விவகாரங்களில் தலையிடவோ அன்றி ஆக்கிரமிக்கவோ சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கு எவ்வித உரிமையும் கிடையாது. இதையே உலகமக்கள் வற்புறுத்துகின்றனர்.

# லண்டன் தமிழ் ஈழப்...........

1-ம் பக்கத் தொடர்..........

பட்டவர்கள் மூலமாக கண்டனக்குரல்களை எழுப்பும்படியும் கோரிவருகின்றனர். தமது யூ.என்.பி. சகாக்களை மனம் குளிரச் செய்வதுடன் தமது விசுவாசத் தன்மையையும் இதன்மூலம் வெளிப்படுத்தி தமது உள்ளக்கிடக்கையையும் உணர்த்துகின்றனர். அதனால் யூ.என்.பி.கூட்டணி — உறவு மேலும் பலப்படும். வாக்க சுகபோக சலுகைகளும் வாய்ப்புவசதிகளும் கூட்டணித் தலைமைக்கு தக்கபடி கிடைக்கும். இரண்டாவது, லண்டன் பிரகடனத்தை எதிர்ப்பதன்மூலம் தாம் ஏற்கனவே உள்ளார்ந்த ரீதியில் கைகழுவிவிட்ட தமிழ் ஈழக் கோரிக்கையின் பாதக விளைவுகளை மறைமுக வழிகளில் கூட்டணியினர்வெளிகாட்டி வருகின்றனர். திடீரெனத் தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிட்டால் தமது அரசியல் குத்துக்கரணத்தை தமிழ் மக்கள் புரிந்துவிடுவார்கள் என அஞ்சுவதால் லண்டன் பிரகடனத்தை எதிர்க்கும் சாட்டில் தமது எதிர்கால நிலைமையை சூசகமாக தெரியப்படுத்தி வருகின்றனர்.

இவ்வேளை தமிழ் மக்களும் — தமிழ் இளைஞர்களும் தமது சிந்தனையை விரிவுபடுத்தி கொள்வது அவசியமாகும். இன்று லண்டன்பிரகடனம் எனகூறப்படும் தமிழ் ஈழக்கோரிக்கை லண்டனிலோ அன்றி அமெரிக்காவிலோஉருவாக்கப்பட்டகோரிக்கை அல்ல. அதன்மூல பிதாமார் இலங்கையில்தான் சீவிக்கின்றனர். அன்று அமிர்தலிங்கத்தின் ஆவேசம்கொண்ட உணர்ச்சிப் பேச்சின் மத்தியில்தான் தமிழ் ஈழக் கோரிக்கை வட்டுக்கோட்டையில் உருவாக்கப்பட்டது. அன்று ஆவேசம்காட்டி உணர்ச்சிகளைக்கிளறி இளைஞர்களை உசுப்பிவிட்ட அமிரும் அவரது கூட்டமும் இன்று லண்டன் பிரகடனத்தைக் கண்டு பதுங்குவதேன்? அன்று வைகுந்தவாசன் என்பவர் ஐ.நா. சபைக்குள் புகுந்து சலசலப்பை ஏற்படுத்திய போது அவரை ஒரு வீரன் எனப் புகழ்ந்த அமிர்தலிங்கம் இன்று அதே நபரை 'வீணவுவன் அறியா வீண செயல் செய்பவர்' என இகழ்வது ஏன்? புரியவில்லை. வட்டுக்கோட்டையில் தமிழ் ஈழக் கோரிக்கை உருவாக்கப்பட்ட போது அமிர்தலிங்கம் பின் விளைவுகளைப்பற்றியோ அன்றி அக்கோரிக்கையால் தமிழ் மக்கள் அடையபோகும் கஷ்டங்களைப்பற்றியோ சிறிது சிந்தித்திருந்தால்எவ்வளவோ நன்மை இருந்திருக்கும். தமக்குத் தேவைப்பட்டபோது தூக்குவதும் தமது சுயநலத் தேவை முடிந்ததும் சக்கையை வீசுவதுபோல் வீசி எறிவதும் தமிழர் கூட்டணித் தலைமைக்குக் கைவந்த கலை தானே.

லண்டன் தமிழ் ஈழப் பிரகடனத்தை நாம் எவ்வகையிலும் ஆதரிக்கவில்லை; அதைக் கண்டித்து எதிர்க்கின்றோம். ஆனால் கண்டிக்கப்படவேண்டியவர்கள் லண்டனிலோ அன்றி அமெரிக்காவிலோ உள்ள ஒரு சில நபர்கள் மட்டுமல்ல; டாரதூரமாக கண்டிக்கப்படட வேண்டியவர்கள் தவறான இத்தமிழ் ஈழக்கோரிக்கையை உருவாக்கிய தமிழர்கூட்டணித் தலைமையான பிற்போக்குவாதிகள் என்பதையும் சுட்டிக்காட்டுகிறோம்.

லண்டன் தமிழ் ஈழப் பிரகடனம் பெரிதுபடுத்துவதற்குரிய ஒன்றல்ல; ஆயிரம் பிரகடனங்களையோ அன்றி ஆயிரம் அறிக்கைகளையோ வெளியிடுவது அவ்வளவு பெரிய விடயமல்ல; ஆனால் அவற்றில் சொல்லப்படும் விடயங்கள் ஒரு நாட்டின் யதார்த்த நிலைமைகட்கும் — மக்களின் வாழ்வுக்கும் ஏற்புடையதாக இருக்குமா? இல்லையா? என்பதே முக்கியமானதாகும். பெரும் ஆரவாரங்களின் மத்தியில் முன்வைக்கப்பட்ட தமிழ் ஈழக் கோரிக்கை இலங்கையில் அதை உருவாக்கியவர்களாலேயே கைவிடப்பட்டுநிலைக்கு வந்துள்ளது என்றால், லண்டன் தமிழ் ஈழப் பிரகடனம் எதைத்தான் சாதிக்கப் போகிறது. நியாயமானதும் நீதியானதுமான ஒரு இலட்சியம் மட்டுமே இறுதிவெற்றி பெற முடியும். ஏனையவை எவ்வளவு எடுப்பானவையாக இருந்தபோதிலும் அவை வரலாற்றில் குப்பைத்தொட்டிக்குள் மட்டுமே சென்றடையக் கூடியவையாகும்.

# யாழ். மாநகர ப. நோ. கூ. சங்க ஊழியர் வேலைநிறுத்தம்!

தமிழர் கூட்டணியின் கோப்பாய் எம். பீ. யான திரு. ஆலாலசுந்தரத்தின் தலைமையிலான யாழ். பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் சகல ஊழியர்களும் 4 - 1 - 82 இல் இருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். நிர்வாகத்தினால் வேலைநீக்கம்செய்யப்பட்ட தொழிற்சங்க செயலாளரை வேலைநீக்கம் செய்துள்ளதை வாபஸ் வாங்கும்படி கோரியே மேற்படி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர். இதில் ஒரு ஊழியர் சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றார் இவ் வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்கள் அனைவரும் சுத்தமான தமிழர்களேயாவர். பலநோக்கு கூட்டுறவுசங்க நிர்வாகபீடத்தில் உள்ள கூட்டணி எம் பி. யால் தனது ஊழியர்களுக்கு உள்ள பிரச்சனையை நியாயமான முறையில் தீர்க்கமுடியாது, ''சிங்கள அரசு'' கொண்டு வந்த அவசரகாலசட்டத்தை காட்டி பயமுறுத்தி அடக்கப் பார்க்கிறார். இத்தகையோர்க்கு 'தமிழ்ஈழம்' கிடைத்தால் தமிழ்த் தொழிலாளர்கள்-ஊழியர்களுக்கு அதோகதிதான்! முதலாளிகள்சார்பில் வாதாடுவதிலும் இவருக்குநிகர் இவரேதான்!

# தோட். தொழிலாளர்பற்றி ஜனாதிபதி

'மலையகத் தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்து வந்திருந்தாலும் இன்று அவர்கள் நம்நாட்டு பிரஜைகளே! அவர்களது பிரச்சினைகளை அக்கறையுடன் கேட்டறிந்து அவர்களுக்கு உதவுவது நமது கடமையாகும். தோட்டத்தையே கிராமமாகக் கொண்டு சிறிய லயன்களில் அண்ணிருடன் அவர்கள் வாழும் வாழ்க்கை வேதனைக்குரியது. இந்நிலை மாற்றப்பட்டு இந்நாட்டில் ஏனைய சமூகத்தினருக்கு அளிக்கப்படும் உரிமைகள் அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்'.

— தோட்டத் துரைமார் கூட்டத்தில் ஜனாதிபதி உரை.

'தோட்டத் தொழிலாளர்கள் இப்பொழுதுதாழ்ந்த நிலையில் இல்லை. அவர்கள் கிராமத்தவர்களை விட மிகவும் சிறந்த நிலையிலேயேயுள்ளனர். அவர்கள் கிராமத்தவர்களிலும் பார்க்க கூடிய சம்பளத்தையே பெறுகின்றனர். தோட்டத் தொழிலாளர்களின் உணவுக்கு உத்தரவாதம் உண்டு. அதே வேளை வீடுகள் இலவசமாகப் பெற்றுள்ளனர். மூன்று அல்லது நான்கு உறுப்பினர்கள் கொண்ட ஒரு குடும்பம் ஒரு மாதத்தில் 1000 ரூபாவிற்கு மேல் சம்பளம் பெறுகின்றனர்.''

— 'நியூ இன்ரநாஷனலிஸ்ட்' என்ற சஞ்சிகைக்கு ஜனாதிபதி அளித்த பேட்டி.

2-ம் பக்கத் தொடர்...........

# இந்தியத்தூதுவர்

மதுரை தமிழ் மாநாட்டின் சமயம் இரகசியமாக எங்கோ நடந்த குசுகுசு கூட்டம்பற்றியும் அதில் அமிர் என்ன கூறினார் என்பதுபற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் பல 'இரகசியங்கள்' பற்றியும் எழுதப் பட்டிருப்பது பலருக்கு ஐயத்தையும் அச்சத்தையும் உண்டாக்கியிருக்கிறதாம்.

ஜனாதிபதிக்கு அமிரால் விளக்கத்துக்காக கூறப்பட்டதாக சொல்லப்படும் இந்த விவரங்கள் மட்டும்தானா அவரால் அந்தரங்கத்தில் கூறப்பட்டவை என்ற கிலி பலருக்குஏற்பட்டுள்ளதாம். கட்சியின் உயர்பிரமுகர்கள் சிலர் கூட இவ்வாறு எண்ணத் தொடங்கியிருக்கின்றனர் என அவர்களின் பிதற்றல்களில் இருந்து தெரிய வருகிறது. பச்சையாகச் சொன்னால், காட்டிக்கொடுத்தலும் சழுத்தறுப்பும் தலைமை மட்டத்தில் தாராளமாக நடைபெறுகிறது என்ற அங்கலாய்ப்பும அச்சமும் பலருக்கு எழுந்துளதாம். பதவிமோகமும், நம்பிக்கைத் துரோகமும் யாரைத்தான் விட்டது? ★

கொள்ளும் வைத்திய கலாநிதி ஒருவர் கொழும்பில் இருப்பவர்கள் சார்பில் யூ. என். பி. பிரமுகர்கள் மத்தியில் வெகுவாக பிரசாரம் செய்தாராம். இவர் முன்னர் பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயகாவின் வால்பிடியாக இருந்தவராம். ஒருநாளைக்கு விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டால் எத்தனையோ வண்டவாளங்கள்வெளிவரும் என்று பல்கலைக் கழக ஊழியர்கள் மத்தியில் காரசாரமாகப் பேசப்படுவதைக் கேட்க முடிந்தது, பல்கலைக் கழகத்தவர்கள் பலருக்கும் கூட்டணிமீதும் சிறப்பாக அமிர்தலிங்கம்மீதும் பெரும் கோபமும் ஆத்திரமும். அரசியலால் கல்விக்கூடத்தைஅசுத்தப்படுத்திவிட்டார் என்பதே அனைவரின் குற்றச்சாட்டாகும். 'கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே'' என்பது அமிருக்கு எவ்வளவு பொருத்தம் என்றே மாணவர்களும் பல்கலைக்கழகத்தோடு தொடர்புடைய மக்களும் பேசிக்கொள்கின்றனர்.

1-ம் பக்கத் தொடர்......

**யாழ்-பல்கலைக்கழக...**

கெற்றும் உத்தரவாதம் அளிக்கப்பட்டதாம். பிரபல கட்டிடக் கலைஞர் ஒருவர், கொந்துராத்துக்காரர்களின் பெயர்களும் ஒத்தாசை புரிந்தோரின் பட்டியலில் இடம்பெறுகிறதாம். பிரதமரின் நண்பர் என்று தன்னைத்தானே கூறிக்

செம்பதாகை

1982-ம் ஆண்டு சந்தா

தனிப்பிரதி 1-00
1-வருடம் 18-00
6-மாதம் 9-00

விபரங்கட்கு
நிர்வாகி
செம்பதாகை
15/1, மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்.

3-ம் பக்கத் தொடர்..........

# சோவியத் யூனியனுக்கு தளம்.........

மலையிலிருந்து அகற்ற வேண்டாம் எனக் குரல்கொடுத்து ''மாட்சிமைதங்கிய மகாராணிக்கு'' தந்தி கொடுத்தவர்கள் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் மட்டுமே என்பதை நாடு நன்கு அறியும்.

இங்கே கவனிக்கக் கூடிய ஒரு விடயம் என்னவெனில் அதே தலைவர்கள் இன்று கூட்டணி வேடம் தாங்கிக் கொண்டு திருகோணமலைத் துறைமுகத்தை அரசு சோவியத் ஏகாதிபத்தியத்திற்குக் கொடுக்க முன்வருமா என அங்கலாய்க்கின்றனர். மக்கள் முன் நீண்டகாலம் தலைகாட்டப் பயந்து மௌனம் சாதித்து வந்த தருமலிங்கம் (எம். பீ.) 'திருகோணமலையை ஏன் சோவியத்துக்குக் கொடுத்தால் என்ன' என்று பிரசங்கம் செய்திருக்கிறார்; அவர்களின் வரலாறு ஏதாவதொரு ஏகாதிபத்தியத்திற்கு அடிமைச் சேவகம் செய்வதாகவே இருந்து வந்திருக்கிறது.

"நமது சுதந்திரம் நம்மிடமே இருக்க வேண்டும், திருகோணமலையை எந்த ஒரு வல்லரசுக்கும் கொடுப்பதை நாம் எதிர்க்கின்றோம் என்று தருமலிங்கம்(எம்.பீ.) கூறியிருந்தால் அவரை மக்கள் போற்றத்தான் வேண்டும். ஆனால் அவரது பேச்சு ஏன் திருகோணமலையைச் சோவியத் ஏகாதிபத்தியத்திற்குக் கொடுத்தால் என்ன என்பதாகவே உள்ளது. இது சோவியத் சமூக ஏகாதிபத்திற்கு அடிவருடும் அடிமைச் சேவகப்பேச்சாகும்.

சோவியத்யூனியன் இத்தகைய அடிவருடிகளை உலகின் சகல நாடுகளிலும் உருவாக்கி அவர்களுக்கு தேவையான சகல வசதிகளையும் அளித்து வருகின்றது. இத்தகைய அடிவருடும் கூட்டத்தினரின் ஆதரவுடனேயே கம்பூச்கியாவில் ஆப்கானிஸ்தானில், லாவோசில் எதியோப்பியாவில், அங்கோலாவில் இன்னும் பல ஆபிரிக்க மத்திய கிழக்கு நாடுகளில் சோவியத் ஏகாதிபத்தியம் தனது மேலாதிக்க நிலையை இறுக்கி வருகிறது. அடிவருடிகளும், அடிமை சேவகம் செய்வோரும் சோவியத் பக்கம் நின்றாலும் மக்கள் அந்தந்த நாடுகளில் சமூக ஏகாதிபத்தியத்தை எதிர்த்து புரட்சிகரப் போராட்டங்களையேநடாத்தி வருகின்றனர்.

தருமலிங்கம் ஏற்கனவே கம்பூச்சிய பொம்மை ஆட்சியை ஏன் நமது நாடு அங்கீகரிக்கவில்லை என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். ஐ. நா. சபையின் அதிகப்படியான உலகநாடுகள் சனநாயக கம்பூச்சிய அரசே சட்டபூர்வமான அரசு என அங்கீகரித்துள்ளபோது தருமலிங்கத்திற்கு மட்டும் இது கண்ணில் படவில்லைப்போலும். தமிழர் கூட்டணியும் அதற்குமுன் தமிழரசுகட்சியும் எப்போதாவது உலகிலும் உள்நாட்டிலும் நீதியானஇலட்சியத்தின் பக்கமோ அன்றி நியாயத்தின் பக்கமோ நின்றிருக்கிறார்களா? இல்லவே இல்லை; அப்படியாயின் தருமலிங்கமோ அன்றி அவரின் தலைவர் அமிர்தலிங்கமோ இன்றுமட்டும் ஏன்தான் நியாயத்தின் பக்கம் நிற்கவேண்டும்? அவர்களது நிலைப்பாட்டில் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கு பாதபூசை செய்வது சரியானதே ஆனால் தமிழ் மக்களும் இலங்கையின் சகல மக்களும் அதற்கு நேர்விரோதமாகவே உள்ளனர். இலங்கை மக்களின் நிலை நமது நாட்டையோ அன்றி துறைமுகங்களையோ எந்த ஒரு வல்லரசுக்குமோ அன்றி அந்நியநாடுகள் எதற்குமோ தாரைவார்க்கக்கூடாது என்பதேயாகும். அதுவேசரியானதும் வற்புறுத்தப்பட வேண்டியதுமாகும்.

அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம் 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் வெளியிடுபவர்: சி. நவரத்தினம் 15/1 மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்.